**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| | | |
|---|---|---|
| P.W.– 1 ராணி | MCOP No. 42/2025 | 02.03.2026. |

(சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**முதல் விசாரணை தொடர்ச்சி**

வழக்கு விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மைநகல் ம.சா.ஆ.1. விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கையின் ஒளிநகல் ம.சா.ஆ.2. விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தின் ஒளிநகல் ம.சா.ஆ.3. எனது மகன் விண்ணரசனின் விபத்து பதிவேட்டின் ஒளிநகல் ம.சா.ஆ.4. எனது மகன் விண்ணரசனின் இறப்புச்சான்றிதழ் ம.சா.ஆ,5. எனது மகன் விண்ணரசனின் வாரிசு சான்றிதழ் ஒளிநகல் ம.சா–ஆ.6. எனது மகன் விண்ணரசனின் பிரேத பரிசோதனை சான்று ஒளிநகல் ம.சா.ஆ.7. எனது மகன் விண்ணரசனின் பிறப்புச்சான்றிதழ் ஒளிநகல் ம.சா.ஆ.8. எனது மகன் விண்ணரசனின் 10 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் ஒளிநகல் ம.சா.ஆ,9. எனது மகன் விண்ணரசனின் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் ஒளிநகல் ம.சா.ஆ.10. எனது மகன் விண்ணரசனின் NEET மதிப்பெண் பட்டியல் இணைய பதிவிறக்க நகல் ம.சா.ஆ.11. எனது மகன் விண்ணரசன் நாகப்பட்டிணம் அரசு மருத்துவக்கல்லூரியில் சேர்க்கப்பட்டதற்கான Letter of admission ஒளிநகல் ம.சா.ஆ.12. எனது மகன் விண்ணரசனின் மருத்துவ படிப்பு முதலாமாண்டு மதிப்பெண் பட்டியல் ஒளிநகல் ம.சா.ஆ.13. எனது மகனின் ஓட்டுநர் உரிமம் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ 14. எனது மகனின் ஆதார் அட்டையின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.15. 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன பதிவுச்சான்றிதழ் ஒளிநகல் ம,சா.ஆ.16. 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டு ஆவணத்தின் ஒளிநகல்

ம.சா.ஆ.17. 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் சண்முகம் என்பவரது ஓட்டுநர் உரிமம் ஒளிநகல் ம.சா.ஆ.18. 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஆய்வறிக்கை ஒளிநகல் ம.சா.ஆ.19. எனது ஆதார் அட்டையின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.20. எனது வங்கிக் கணக்கு புத்தகத்தின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.21. எனது pan card ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.22. 2ஆம் மனுதாரரின் ஆதார் அட்டையின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.23. 2ஆம் மனுதாரரின் வங்கிக் கணக்கு புத்தகத்தின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.24. 2ஆம் மனுதாரரின் pan card ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.25. 3ஆம் மனுதாரரின் ஆதார் அட்டையின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.26. 3ஆம் மனுதாரரின் வங்கிக் கணக்கு புத்தகத்தின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.27. 3ஆம் மனுதாரரின் pan card ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.28. எனவே, மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது மகன் ஓட்டிச்சென்ற வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச்சென்ற வாகனத்தின் பதிவுச்சான்றிதழும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனம் இவ்வழக்கு விபத்தில் ஈடுபடவே இல்லை என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தை தவறாக தொடர்பு படுத்தி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஆய்வறிக்கையில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எவ்வித சேதமும்

இல்லை என்றால் சரியல்ல. எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது மகன் மீது மோதிய டிராக்டருடன் டிப்பர் இணைக்கப்பட்டிருந்ததா என்றால் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி டிப்பருக்கு தனியாக பதிவு எண் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனம் அவரது நண்பரின் வாகனம் ஆகும். விபத்து நடந்த சாலை நாகப்பட்டிணத்திலிருந்து மருந்து கொத்தலை செல்லும் சாலை என்றால் சரிதான். விபத்து சாலையின் மையப்பகுதியில் நடைபெற்றது என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து பற்றி கேள்விப்பட்டதன் பேரில் தான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன். விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் விபத்திற்கு முன்பாக நான் கைப்பேசியில் பேசியபோது தலைக்கவசம் அணிந்து செல்வதாக தான் கூறினார். எனது மகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டு தான் இறந்துபோனார் என்றால் சரிதான். தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், எனது மகன் தலைக்கவசம் அணிந்து சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் மீது மோதிய டிப்பர் வாகனத்தின் சிமெண்ட் மற்றும் மணல் இருந்ததாக கூறினார்கள். 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனம் விவசாய பயன்பாட்டிற்காக பதிவு செய்யப்பட்ட வாகனம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாகனத்தை விவசாய பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தாமல் கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்தியுள்ளதால் 2 ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனது மகனின் படிப்பு

பற்றி நான் கூறியுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. 3 ஆம் மனுதாரர் இறந்தவரை சார்ந்த நபர் கிடையாது என்றும், எனவே அவரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது மகனும் காரணம் என்பதால் எனக்கு எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு விதிகளை மீறியுள்ளதால் 2 ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

சாட்சியின் கையொப்பம்:ஒம்./– ராணி

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

INBAKARTHICK

Digitally signed by INBAKARTHICK
Date: 2026.03.02 12:36:58 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.